**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8064854

1. District : VELLORE மாவட்டம் PS: VIGILANCE & ANTI CORRUPTION காவல்நிலையம் VELLORE Year: 2019 ஆண்டு FIR No.: 17/2019 மு.த.அ. எண் Date: 16.09.2019 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 of P.C. Act 1988
(ii) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: as amended by P.C.
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: (Amendment) Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : — நாள் முதல் Date to : August 2019, 6.9.2019 and 13.9.2019 நாள் வரை
Time Period : நேர அளவு Time from : — நேரம் முதல் Time to : — நேரம் வரை
(b) Information Received at PS. Date : 16.09.2019 காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : 09.00 hrs நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Vellore 11/2019 பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : 08.00 hrs. நேரம்

4. Type of Information : Written/ Oral : Tamil Typed Complaint
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: North [illegible] [illegible] mtrs.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Deputy Director, District Town & Country planning office, Fort Round, Vellore

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : R. Ganesh குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : [illegible] தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : Indian நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி No 44/29, Arunachala Achari St, 3rd Main, Chepauk, Chennai-5.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. T. Gnanamani, Deputy Director, District Town and Country Planning, Vellore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

NO DELAY

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet Attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 16.09.2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 10.00 hrs

Name: பெயர் ..............................
Rank: நிலை ....................No. எண் ..........

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

பணிந்து அனுப்பப்படுகிறது:- வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் 16.09.2019-ஆம் தேதி காலை 0800 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது புகார்தாரர் திரு.R.கணேஷ், த/பெ. ராஜேந்திரன், எண்.46/28, அருணாச்சல ஆச்சாரி தெரு, சாய் இல்லம், சேப்பாக்கம், சென்னை என்பவர் நேரில் ஆஜராகி தட்டச்சு செய்த புகார் மனு கொடுத்தார். மேற்படி புகார் மனு பின்வருமாறு, அனுப்புநர் R.கணேஷ், த/பெ. ராஜேந்திரன் எண்.46/28, அருணாச்சல ஆச்சாரி தெரு, சாய் இல்லம், சேப்பாக்கம், சென்னை. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, வேலூர், வேலூர் மாவட்டம். அய்யா, என் பெயர் கணேஷ் நான் 12-ம் வகுப்பு வரை படித்துள்ளேன், நான் திருமணமாகி என்னுடைய குடும்பத்துடன் சென்னை சேப்பாக்கத்தில் அருணாச்சால ஆச்சாரி தெருவில் வசித்து வருகிறேன். நான் ஆரம்பகாலத்தில் குளிர்பானங்களை மொத்தமாக விற்பனை செய்யும் தொழிலையும், பின்னர் இருசக்கர வாகனத்திற்கு தேவையான உதிரி பாகங்களை தயார் செய்து விற்பனை செய்து வந்தேன் மேற்படி தொழிலில் போதிய லாபம் இல்லாததாலும் தொழில் நலிவு அடைந்ததாலும் அந்த தொழிலை விட்டுவிட்டு கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் நில விற்பனை சம்மந்தமான தொழிலை திருவள்ளுவர் மாவட்டம் மற்றும் வேலூர் மாவட்டம் அரக்கோணம் பகுதியில் செய்து வந்தேன். அந்த வகையில் கடந்த 2008 ஆம் ஆண்டு சென்னையை சேர்ந்த திருமதி.கலைவாணி க/பெ. லேட் முருகதாஸ் என்பவருக்கும் மற்றும் திரு.லஷ்மி நாராயணன், த/பெ. நரசிம்மலு என்பவருக்கும் அதேபோன்று மேலும் பல நபர்களுக்கும் அரக்கோணம் பகுதியில் நிலத்தினை வாங்கி கொடுத்துள்ளேன், அதற்கு உரிய கமிஷன் தொகையை பெற்றுக்கொள்வேன். அவ்வாறு நான் திருமதி.கலைவாணி மற்றும் திரு.லஷ்மி நாராயணன் ஆகியோருக்கு 2008 மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளில் வேலூர் மாவட்டம், அரக்கோணம் தாலுக்கா, தணிகைபோளூர் கிராமத்தில் சுமார் 10 ஏக்கர் நிலத்தினை வாங்கி கொடுத்தேன், அச்சொத்தானது அரக்கோணம் இணை சார் பதிவாளர்-2 அலுவலகத்தில் பொது அதிகார பத்திரமாக பதிவு செய்யப்பட்டது. அதன்பின்னர் அந்த சொத்தானது வீட்டு மனை பிரிவுகளாக மாற்றப்பட்டு தற்போது திருமதி.கலைவாணி மற்றும் திரு.லஷ்மி நாராயணன் அவர்களின் பங்கில் உள்ள சொத்தில் சுமார் 44 மனைபிரிவுகள் விற்பனை செய்யப்பட்டு மீதம் சுமார் 271 மனை பிரிவுகள் விற்பனை ஆகாமல் இருந்துவந்தது. இந்நிலையில் தமிழக அரசின் உத்தரவுபடி மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டத்தின்கீழ் அனுமதியற்ற வீட்டு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு வேலூர் அலுவலகத்தின் அனுமதி பெறவேண்டும் என்ற காரணத்தால் 10.09.2016 அன்று திருமதி.கலைவாணி அவர்களுக்கும் எனக்கும் மேற்படி விற்பனையாகாமல் இருந்த மனைப்பிரிவுகளை மேம்படுத்தி அவற்றை விற்பனை செய்ய தேவையான வேலைகளை செய்வதற்கான ஒப்பந்தம் போடப்பட்டது.. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் நான் கடந்த 02.05.2018 அன்று பணம் ரூ.17,000/- ஆன்லைனில் செலுத்தி அதற்கான ஒப்புகை சீட்டு எண்.DTCP/L/0215406/2017 பெற்றேன். அதன் பின்னர் நகர் ஊரமைப்பு வேலூர் அலுவலகத்தின் அனுமதி பெறதேவையான சம்மந்தப்பட்ட சொத்திற்கான

ஆவணங்கள், பட்டா, வில்லங்க சான்று, வரைபடம், படிவங்கள் மற்றும் பணம் செலுத்தியதற்கான ரசீது ஆகியவற்றை இணைத்து வேலூர் நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் கடந்த ஜூன் மாதம் 2018 கொடுத்தேன், என்னுடைய மனுவிற்கு கோப்பு எண்.3544/2018 என்று வழங்கப்பட்டது. நான் கொடுத்த மனு மற்றும் அனுமதியற்ற குடியிருப்பு மனை பிரிவிற்கு அனுமதி வழங்குவது சம்மந்தமாக எவ்வித தகவலும் வராத காரணத்தாலும் திருமதி.கலைவாணி அவர்களும் வீட்டுமனைகளை விற்பனை செய்ய ஏற்பாடு செய்து கொடுக்குமாறு தொடர்ந்து கேட்டுக்கொண்டதால் கடந்த 25.06.2019 அன்று நான் சென்னையில் இருந்து வேலூர் நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு வந்து அங்கு பணியில் இருந்த துணை இயக்குநர் திரு.ஞானமணி அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம் அனுமதி வழங்கப்பட வேண்டிய கோப்பு எண்.3544/2018 குறித்தும் சொத்து அமைந்துள்ள இடம் மற்றும் என்னுடைய இருப்பிட முகவரி ஆகியவற்றை என்னிடம் பெற்றுக்கொண்டு வரைபடம் தயார் செய்து கொண்டு சுமார் 10 நாட்கள் கழித்து வருமாறு கூறினார். நானும் அவர் சொன்னவாரே அவரை சென்று சந்தித்தேன். அப்போது வரைபடத்தினை முழுமையாக முடித்தும் சில மாற்றங்களை செய்து கொடுக்கும்படி அவர் கூறினார். அதன் பின்னர் நான் துணை இயக்குநர் திரு.ஞானமணி அவர்களை ஆகஸ்ட் மாதம் 2019 சென்று சந்தித்தேன். அப்போது அவர் 2,96,379 சதுர அடி (OSR) உட்பட உள்ள இடத்திற்கு ஒரு சதுர அடிக்கு ரூ.1/- வீதம் மொத்தம் ரவுன்டாக ரூ.3,00,000/- லஞ்சமாக கொடுக்குமாறு கேட்டார். அதற்கு நான் சார் சொத்து திருமதி.கலைவாணி என்பவருடையது நான் சொற்ப லாபத்திற்காக இந்த வேலையை பொறுப்பு எடுத்துக்கொண்டு செய்து வருகிறேன் என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று சொன்னேன், அதற்கு அவர் நீங்கள் பணம் கொடுத்தால் மட்டுமே உங்கள் ஆவணங்கள் சரியாக உள்ளது என்று அதனை கணினியில் பதிவேற்றம் செய்ய முடியும் இல்லை என்றால் இன்னும் பல வருடங்கள் ஆனாலும் உங்களுக்கு வீட்டு மனை வரன்முறைபடுத்துவதற்கான அனுமதி கிடைக்காது என்று சொல்லி நன்றாக யோசித்து பணத்தை ஏற்பாடு செய்து கொண்டு இந்த கோப்பு சம்மந்தமாக என்னை வந்து பாருங்கள் என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டார். அதன் பின்னர் கடந்த 06.09.2019 அன்று நான் வேலூர் நகர் ஊரமைப்பு அலுவலகம் சென்று பணியில் இருந்த திரு.ஞானமணி அவர்களை மீண்டும் சந்தித்து சார் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை அரசுக்கு செலுத்த வேண்டிய தொகை அனைத்தையும் செலுத்திவிடுகிறேன் என்னுடைய கோப்பின் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டேன், அதற்கு அவர் உங்களிடம் அவ்வளவு பணம் இல்லை என்றால் கடைசியாக ரூ.2,00,000/- லட்சம் கொடுத்துவிடுங்கள் அதற்கு மேல் நான் எதுவும் செய்யமுடியாது என்று சொன்னார். நான் கேட்ட பணத்தை கொடுத்தால் உங்களுடைய கோப்பு அப்போதே அனுமதி வழங்குவதற்காக ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்படும் என்று சொல்லி அனுப்பிவிட்டார். அதன்பின்னர் மீண்டும் 13.09.2019 அன்று காலை நான் வேலூர் வந்து மீண்டும் திரு.ஞானமணி துணை இயக்குநர் அவர்களை சந்தித்தபோது என்னை பார்த்தவுடன், என்ன நான் கேட்ட பணம் ரூ.2,00,000/- கொண்டுவந்துவிட்டீர்களா என்று கேட்டார். அதற்கு சார் கொஞ்சம் பார்த்து செய்யுங்கள் தற்போது ரியல் எஸ்டேட் தொழில் மிகவும் மோசமான நிலையில்

உள்ளது தயவு செய்து என்னுடைய கோப்பின் மீது நடவடிக்கை எடுத்து அனுமதி வழங்குமாறு அவரிடம் கேட்டேன். அதற்கு திரு.ஞானமணி அவர்கள் பணம் ரூ.2,00,000/- லஞ்சமாக எனக்கு கொடுக்காமல் உன் வேலை முடியாது அதனால் வரும் 16.09.2019 ஆம் தேதி என்னுடைய அலுவலகத்திற்கு வந்து நான் கேட்ட பணம் ரூ.2,00,000/-த்தை கொடுத்தால்தான் உன்னுடைய வேலை முடியும் என்று கன்டிப்புடன் சொல்லி என்னை அனுப்பிவிட்டார். திரு.ஞானமணி துணை இயக்குநர் நகர் ஊரமைப்பு அலுவலகம், வேலூர் மண்டலம் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.2,00,000/- பணத்தை கொடுத்து அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைபடுத்துதல் கீழ் வரன்முறை ஆணை பெற நான் விருப்பமில்லை, ஆகையால் திரு.ஞானமணி, துணை இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம், வேலூர் மண்டலம் அவர்கள் கேட்ட லஞ்ச பணம் ரூ.2,00,000/-தை அவருக்கு கொடுக்கும்போது அவரை பிடித்து சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxxxxxxx (R.Ganesh), 16.9.2019 இணைப்பு: 1.ஆன்லைனில் பணம் ரூ.17,000/- செலுத்தியதற்கான பதிவு ரசீது எண். DTCP/L/0215406/2017-ன் நகல். 2. 10.09.2016 நாளிட்ட எனக்கும் திருமதி.கலைவாணி அவர்களுக்கும் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்த நகல்.

Sir,

Received the complaint on 16.09.2019 at 08.00 hrs and a quick verification on the general reputation of the accused had made and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also checked and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 16.09.2019 at 09.00 hrs a case was registered in Vellore V&AC Cr.No.17/2019, u/s. 7 of Prevention of Corruption Act 1988 as amended by PC (Amendment) Act 2018. The FIR in original along with the complaint with enclosures was sent to Hon'ble CJM and Special Judge, Vellore and sent the copies to the officers concerned. (Sd/-xxxxxx) 16/9/19 M.RAJANIKANTH, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Vellore.

16/9/19

*Inspector of Police*
*Vigilance & Anti. Corruption*
*Vellore-1.*